# <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.</u>

## <u>O.S.No.310/2022</u>

| | |
|---|---|
| வாதி தரப்பு சாட்சி | **வா.சா. 1** |
| பெயர் | திரு. வீராசாமி |
| தந்தை பெயர் | திரு. பலராமன் |
| கிராமம் | தவசி |
| வட்டம் | செய்யாறு |
| தொழில் | விவசாயம் |
| வயது | 65 |

2025–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

1. நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | 05-10-1957 | பலராம கவுண்டர் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் சான்று நகல் - வா.சா.ஆ.1. |
| 2. | - | தாவா சொத்தை விளக்கும் மாதிரி வரைபடம் - சான்று நகல் - வா.சா.ஆ.2. |
| 3. | 08-07-2020 | வாதி அனக்காவூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ரசீது - சான்று நகல் - வா.சா.ஆ.3. |
| 4. | 02-09-2020 | வாதி அனக்காவூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ரசீது - சான்று நகல் - வா.சா.ஆ.4. |
| 5. | - | அசல் வழக்கு எண். 58/2020 வழக்கின் வழக்குரை நகல் - வா.சா.ஆ.5. |
| 6. | 12-07-1957 | கிரைய பத்திரத்தின் சான்று நகல் - வா.சா.ஆ.6. |
| 7. | - | சர்வே எண். 298 புல வரைபடம் - சான்று நகல் - வா.சா.ஆ.7. |
| 8. | - | கிராம நத்தம் சர்வே எண். 206 உட்பிரிவு குறித்து வழங்கப்பட்ட அடங்கல் - சான்று நகல் - வா.சா.ஆ.8. |
| 9. | 12-02-2020 | திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட மேலெழுத்து கடிதத்தின் சான்று நகல் - வா.சா.ஆ.9. |
| 10. | 02-01-2006 | செய்யாறு கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழக்கு எண். 359/2004-ல் பிறப்பித்த தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் - வா.சா.ஆ.10. |
| 11. | 03-04-2021 | எனக்கு பிரதிவாதிகளின் வழக்கறிஞர் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல் - வா.சா.ஆ.11. |
| 12. | 12-04-2021 | நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் பதில் அறிவிப்பு - அலுவலக நகல் - வா.சா.ஆ.12. |

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 13. | 22-04-2014 | கிரைய பத்திரத்தின் சான்று நகல் - வா.சா.ஆ.13. |

எனவே, தாவாப்படி தீர்ப்பாக வேண்டி பிராத்திக்கிறேன்.

குறுக்கு விசாரணை :-

(1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**